# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 18.02.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இரண்டு நாட்களுக்கு முன்பு இங்குள்ள மிசனரி பொறுப்புப் பிரச்சாரகர் இமாம் அதாவுல் முஜீப் சாஹிப் ராஸித் அவர்கள் எனக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருந்தார்கள். முஸ்லிஹ் மவ்ஊது தொடர்பான முன்னறிவிப்பு செய்யப்பட்டதிலிருந்து இந்த வருடம் வரை 125 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அவர்கள் கடிதம் எழுதிய விதத்திலிருந்து நான் இந்த தலைப்பில் குத்பா கொடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றார்கள் என்று எனக்கு தெரிந்தது. இந்தத் தலைப்பைப் பற்றி எடுத்துக் கூறும் விதமாக ஒவ்வொரு வருடமும் கூட்டம் நடக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் இதைப்பற்றி நான் குத்பா கொடுத்துள்ளேன். ஒரு குத்பாவில் இந்தக் கருத்தை முழுமையாகக் கூறி விட முடியாது. முதலில் நான் இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. பிறகு எனது இயல்பு இதன் பக்கம் திரும்பியது. இது ஒரு மகத்தான முன்னறிவிப்பாக இருக்கின்றது. இரு ஒரு தனி நபருடன் தொடர்புடையது அல்ல. மாறாக, இந்த முன்னறிவிப்பு இஸ்லாத்தின் இரண்டாவது மறுமலர்ச்சியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. இந்த முன்னறிவிப்பின் அடித்தளமாக அமைவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாகும்.

எனவே இதைப் பற்றி பேசுவது அவசியமானதாகும் என்று எனக்கு தோன்றியது. எங்கு சுதந்திரமாக ஜமாஅத் அளவில் கூட்டம் நடத்த முடியுமோ அங்கு இதை விளக்கும் கூட்டங்கள் நடந்து விடும். இந்த முன்னறிவிப்பு தொடர்பான பல்வேறு அம்சங்களை விளக்கியவாறு பல சொற்பொழிவாளர்கள் அவற்றை விளக்கிக் கூற முயற்சி செய்கின்றார்கள். ஆனால், பாகிஸ்தானில் இத்தகைய கூட்டங்களை நடத்த முடியாது. அங்குள்ள புதிய தலைமுறைக்கு இந்த தலைப்பில் கருத்துக்களைக் கூறுவது அவசியமானதாகும். இளைஞர்களுக்கும், புதிதாக ஜமாஅத்தில் இணைபவர்களும் இவற்றைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். காலத்தின் மாற்றங்களுக்கேற்ப வயதானவர்கள் கூட இம்முன்னறிவிப்பு பற்றி அதிகமாக சிந்திக்காமல் இருந்திருக்கலாம். இன்று அப்படிப்பட்டவர்களது இயல்பும் இதன் பக்கம் திரும்பியிருக்கக் கூடும். எனவே, ஓரளவு இந்த தலைப்பில் வி-யங்களைக் கூற வேண்டியது அவசியமாகும். புதிதாக வந்தவர்களுக்கும் பழைய அஹ்மதிகளுக்கும் இவ்வி-யங்களை மீண்டும் மீண்டும் கூறுவதன் மூலம் அது அவர்களது ஈமானையும் இறைஞானத்தையும் அதிகரிக்கும் வகையில் இருக்கும். புதிய இடங்களில், புதிய நாடுகளில் ஜமாஅத் வேகமாக பரவும் போது அங்குள்ள பேச்சாளர்கள் மற்றும் அங்கு நியமிக்கப்பட்டுள்ள முபல்லிக்குகளுக்கு இது பற்றிய ஒவ்வொரு வி-யம் தொடர்பாகவும் முழுமையான அறிவு இருக்காது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இந்த முன்னறிவிப்பு தொடர்பாக சரியான அறிவு அவர்களுக்கு இல்லாததால் இதன் ஆழம் வரை சென்று அதனை அவர்களால் விளக்க முடியாது. ஆக, இதன் அடிப்படையில் இதனை விளக்குவது அவசியமானது என்று நான் கருதினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், அல்லாஹ் எனக்கு ஒரு மகனை வழங்குவான். அவர் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருப்பார் என்ற முன்னறிவிப்பை செய்து அதன் விளக்கமாக அந்த மகன் தொடர்பான பல்வேறு சிறப்பம்சங்களை எடுத்துக் கூறியிருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ 1400 வருடங்களுக்கு முன்னரே இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார்கள்.

**மர்யமின் மகன் ஈஸா பூமியில் இறங்கும்போது அவர் திருமணம் முடிப்பார். அவர்களுக்கு பிள்ளைகள் பிறப்பார்கள்.**

மர்யமின் மகன் ஈஸா யார் என்பதை விளக்கியவாறு இன்னொரு நபிமொழியில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். இது புகாரியிலுள்ள நபிமொழியாகும். முஸ்லிமிலும் இன்னும் பிற ஹதீஸ் நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**கய்ஃப அன்த்தும் இஸா நஸ்஥ல ஈசப்னு மர்யம ஃபீகும் வஇமாமுக்கும் மின்கும்.** மேலும் இமாமுக்கும் மின்கும் என்று வந்துள்ளது. மர்யமின் மகன் உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருக்கும் போது உங்களின் நிலை எவ்வாறிருக்கும்?

அவர் உங்களிலிருந்து தோன்றியிருப்பதால் உங்களுக்கு இமாமாக இருக்கும் கடமையையும் அவர் நிறைவேற்றுவார் என இன்னொரு அறிவிப்பில் இருக்கின்றது.

இன்னொரு ஹதீஸில் உங்களில் உயிருடனிருப்பவர் மர்யமின் மகன் ஈஸாவின் காலத்தைப் பெறுவார். அவரே இமாம் மஹ்தியாகவும், நெறிநீதி தீர்ப்பவராகவும் இருப்பார். அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்வார். இந்த ஹதீஸ் முஸ்னத் அஹ்மதில் இடம்பெற்றுள்ளது.

இந்த முன்னறிவிப்பு இஸ்லாத்தின் இரண்டாவது மறுமலர்ச்சியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக இருக்கும் மஹ்தி மஸீஹ் இந்த முன்னறிவிப்பை விளக்கிக் கூறியிருந்தாலும் 1400 வருடங்களுக்கு முன்பே இன்னும் சொல்லப்போனால் அதற்கு முன்பே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பே இதன் அடித்தளமாக இருக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளும் அல்லாஹ் அவர் மீது செய்துள்ள அருள்களும் அன்னாரை பெருமைப்படுத்தும் விதமாக இருக்கவில்லை. மாறாக இந்த முன்னறிவிப்புகள் அவர்களது எஜமானரும் தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மகிமையை உயர்த்தக் கூடியவையாக உள்ளது. அன்னாரது கொடியை உலகில் பறக்க விடுவதற்காக உள்ளன ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் காட்டுகின்ற இறை உதவியின் அடையாளங்கள் அவர்களின் மகிமையை உயர்த்துவதற்காகவே வெளிப்பட்டன. இஸ்லாம் உயிருள்ள மார்க்கம். இஸ்லாம் கூறும் தூதர் உயிருள்ள தூதர் என்பதைக் காட்டுவதற்காக இந்த முன்னறிவிப்புகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்திருந்தார்கள்.

எனவே, அஹ்மதிய்யத் இஸ்லாத்தை விட்டும் வேறுபட்ட ஒன்றல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட உலகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பேரன்பு கொண்டவர் யாரும் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இப்போது வானத்தின் கீழ் ஒரு நபி மட்டுமே உள்ளார். ஒரு வேதம் மட்டுமே உள்ளது.

அந்த தூதர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் எல்லா நபிமார்களை விடவும் உயர்ந்தவரும் சிறந்தவரும் ஆவார்கள். எல்லா தூதர்களை விட சிறப்புகளில் முழுமை பெற்றவராகவும் காத்தமுல் அன்பியாவாகவும் அவர்கள் இருக்கின்றார்கள். மக்களில் சிறந்தவராகவும் இருக்கின்றார்கள். அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக இறைவன் கிடைக்கின்றான். இருள்களின் திரைகள் அகன்று விடுகின்றன. இந்த உலகில் உண்மையான இரட்சிப்பிற்கான அடையாளங்கள் தெளிவாக தென்படுகின்றன. திருக்குர்ஆன் உண்மையான முழுமையான நேர்வழி மற்றும் சிறந்த தாக்கத்தால் நிரம்பியுள்ளது. அதன் மூலம் உண்மையான அறிவும் இறைஞானமும் கிடைக்கின்றது. மனித அழுக்குகளிலிருந்தும் உள்ளம் தூய்மையடைகிறது. மனிதன் சோம்பேறித்தனம், கவனமின்மை, சந்தேகம் ஆகிய திரைகளிலிருந்து விடுபட்டு நிச்சய உறுதியின் உயர்தகுதி வரை இதன் மூலம் சென்று விடுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எந்த விசயத்தை எடுத்துக் கொண்டாலும், அவர்களது வாழ்க்கையின் எந்த செயலை நீங்கள் பார்த்தாலும் அவர்களது எந்த எழுத்துக்களைப் பார்த்தாலும் அவை எல்லாவற்றின் திசையும் அல்லாஹ், திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கமே இருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உலகிற்கு முன்னால் இன்று ஏதாவதொரு உயிருள்ள மார்க்கம் இருக்கின்றதென்றால் அது இஸ்லாமாகும். இன்று, ஏதாவதொரு தூதர் உயிருடன் இருக்கின்றார் என்றால், இறைவனுடன் நம்மை சந்திக்க வைப்பவராக இருப்பவர் என்றால் அது ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்களை பின்பற்றுவதன் மூலமாக இறைவன் கிடைக்கின்றான். இன்று முழுமை

பெற்ற வேதம் இருக்கின்றதென்றால் அது எல்லாவிதமான இடைச்செருகளிலிருந்தும் மாற்றப்படுகின்ற விசயங்களிலிருந்தும் தூய்மையாகவும், தனது அசல் நிலையிலும் இருக்கின்ற திருக்குர்ஆனே ஆகும். அதைப் படிப்பதன் மூலம் உண்மையான அறிவுகளும் இறைஞானங்களும் கிடைக்கின்றது. அதைப் படிப்பதன் மூலம் மனிதனின் உள்ளம் தூய்மையாகிறது. அதை களங்கமற்ற உள்ளத்துடன் படிக்க வேண்டும். தூய்மையற்ற உள்ளங்கள் திருக்குர்ஆனிலிருந்து எந்தப் பயனையும் பெற முடியாது. இதையே அல்லாஹ் திருக்குர்ஆனிலும் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்கள் இந்த சிந்தனையால் நம்மை நிரப்பியுள்ளார்கள். இந்த இறைஞானத்தை நமது உள்ளத்திற்கும் மூளைக்கும் தந்தார்கள். எனவே இன்று உயிருள்ள நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள். அவர்கள் இறைவனோடு நம்மை சந்திக்க வைத்தார்கள். நேரடியாக அல்லாஹ்வுடன் தொடர்பு வைப்பதற்கு அவர்கள் நமக்கு வழிகாட்டினார்கள். அதன் மூலம் உள்ளங்களிலுள்ள இருள்கள் அகன்று விடும். இறைவனுக்கும், அடியாருக்கும் தொடர்பு உருவாகி விடும். கியாமத் நாள் வரை மனிதனுக்கு தேவையான எல்லா விசயங்களும், இறைவன் ஏவிய விசயங்களும் தடுத்த விசயங்களும் இறைவன் வரை நம்மை கொண்டு செல்லும் வழிமுறைகளும் அவர்களுக்கு அருளப்பட்ட உயிருள்ள வேதத்தில் இருக்கின்றது. அதற்கு வெளியில் எதைப் பற்றியும் சிந்திப்பதற்கான ஆற்றல் மனிதனுக்கு இல்லை.

இந்த மகத்தான என்றென்றும் உயிருடன் இருக்கின்ற நபி தன்னைப் பின்பற்றுபவர்களை 1400 வருடங்களுக்கு முன்பு எவ்வாறு இறைவனுடன் இணைத்தாரோ அவ்வாறே இன்று 1400 வருடங்கள் கடந்த பிறகும் அதே விதத்தில் இறைவனுடன் நம்மை அவர்கள் இணைத்துள்ளார்கள். வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் என்ற திருக்குர்ஆன் முன்னறிவிப்பு நிறைவேறும் காலம் வந்த போது தனது எஜமானரிடத்தில் அடிமைக்கு இருந்த அந்த அன்பு நேசத்தின் காரணத்தால் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்ட ஈமானை பூமிக்கு கொண்டு வருவதற்கு காரணமாக ஆகிவிட்டது. முஹம்மதிய மார்க்கம் ஒரு புதிய மகிமையுடன் முஹம்மதிய மஸீஹின் மூலம் நிலைநாட்டப்பட்டது. முன்னவர்களுடன் பின்னவர்கள் இணைக்கப்பட்டார்கள். அதைப் பற்றி ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்த போது சூரா ஜுமுஆ இறங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அதிகாரத்திலுள்ள ஒரு வசனமான **வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்** – பின்னால் வரக்கூடிய மக்களில் சிலரும் சஹாபாக்களுடன் இணைந்து விடுவார்கள். அவர்கள் இப்போது இவர்களை சந்திக்கவில்லை. இந்த வசனம் இறங்கிய போது ஒரு மனிதர் யா ரஸூலுல்லாஹ்! இந்த மக்கள் யார்? என்று கேட்டார். இவர்கள் சஹாபாக்களின் உயர் தகுதியைப் பெற்றிருந்தும் இதுவரை சஹாபாக்களுடன் இணையாத இவர்கள் யார்? என்று அவர் கேட்டார். அதற்கு ஹஸரத் ரஸூல் (ஸல்) அவர்கள் எந்த பதிலும் கூறவில்லை. மூன்று முறை அந்த நபர் இதே கேள்வியைக் கேட்டார். அறிவிப்பாளர் கூறுகின்றார். அப்போது எங்கள் மத்தியில் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கைகளை அவர்களது தோள்களின் மீது வைத்து இவ்வாறு கூறினார்கள்.

ஈமான் கார்த்திகை நட்சத்திரம் அளவு சென்று விட்டாலும் அதாவது பூமியிலிருந்து அது சென்று விட்டாலும் இவர்களிலிருந்து சிலர் அதனை மீண்டும் கொண்டு வருவார்கள்.

**ரஜுலுன், ரிஜாலுன்** என்ற சொற்களுள்ள வெவ்வேறு அறிவிப்புகள் உள்ளன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிறிது காலம் கழிந்த பின்னரே தாம் மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் வாதம் செய்தார்கள். ஆனால், அதற்கு முன்னரே அவர்கள் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். இறை அறிவிப்புகளின் அடிப்படையில் நூற்றாண்டின் முஜத்தித்தாக அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர்கள் தெரிந்ததும் அவர்கள் ஆங்கிலத்திலும் உருதுவிலும் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். என்னை இறைவன் இந்த நூற்றாண்டின் முஜத்தித்தாக நியமித்துள்ளான். இந்த பணிக்காக நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன். இஸ்லாத்தின் உண்மையை மற்ற எல்லா மார்க்கங்களுக்கு

எதிரிலும் நிரூபித்துக் காட்டுவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். இப்போது உயிருள்ள மார்க்கம், உயிருள்ள வேதம், உயிருள்ள தூதர் இஸ்லாமும், திருக்குர்ஆனும், முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுமே ஆவர். ஆன்மீகமான முறையில் எனக்குள்ளே மர்யமின் மகன் ஈஸாவின் சிறப்புக்கள் அமைந்துள்ளன என்று அவர்கள் அதில் குறிப்பிட்டிருந்தார்கள்.

உலகிலுள்ள எல்லா மதத்தைச் சார்ந்தவர்களிடத்திலும் சவால் விடுத்தவாறு அவர்கள் இஸ்லாத்தின் உண்மையை சோதித்துப் பார்க்க முன்வர வேண்டும் என்று கூறினார்கள். ஆன்மீக நோய்களை இஸ்லாம்தான் குணப்படுத்தும். மற்ற மார்க்கங்களால் இதை செய்ய முடியாது என்று அவர்கள் அறிவிப்பு செய்தார்கள்.

இந்த அறிவிப்பானது இந்தியாவிலுள்ள பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களிடத்தில் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தி விட்டது. ஆனால் இஸ்லாத்தின் உண்மையை அனுபவரீதியாக சோதித்துப் பார்க்கும் தைரியம் யாருக்கும் வரவில்லை. இஸ்லாத்தைக் கைவிட்டு விட்டு கிறித்தவத்தின் மடியில் சென்று விழுந்த இமாமுத்தீன் போன்ற பாதிரிகள் கூட எந்தவொரு அடையாளத்தை கோரவில்லை. அல்லது எதிர்த்துப் போட்டி போட வேண்டிய தேவை இல்லை என்ற முடிவுக்கே வந்தார்கள். ஆனால், சுவிஃப்ட் என்ற ஒரு பாதிரியும், லேக்ராம் போன்றவர்களும் இந்த சவாலை எதிர்த்து போட்டிக்கு வருவதாக தெரிவித்திருந்தாலும் பின்னர் நடந்த சம்பவங்கள் இவர்களது இந்த செயலும் வெளிவே-ம்தான் என்பதை நிரூபித்து விட்டது. இதன் விளக்கம் ஜமாஅத் நூல்களிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்ளிலும் அஹ்மதிய்யா வரலாற்றிலும் உள்ளன. அதை இப்போது விளக்க முடியாது.

இஸ்லாத்தின் உண்மையை ஆய்வு செய்வதற்காக அவர்கள் விடுத்த அழைப்பு பற்றியும் இது தொடர்பாக வெளியிட்ட பிரசுரங்கள் தொடர்பாகவும் இஸாலே அவ்ஹாம் என்ற நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த எளியவன் அதே ஈமானின் உணர்வுடன் இஸ்லாத்தின்பால் அழைப்பதற்காக நிற்கின்றேன். ஏறக்குறைய 12,000 பிரசுரங்களை இஸ்லாத்திற்காக அழைப்பு விடுக்கும் நோக்கத்தில் பதிவு தபால் மூலமாக எல்லா சமுதாயங்களைச் சார்ந்த தலைவர்களுக்கும், அமீர்களுக்கும், நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். எதுவரையென்றால் பிரிட்டீஸ் அரசாங்கத்தின் இளவரவராக இருந்த இளவரசர் வலி அஹத் அவர்களின் பெயரிலும் ஒரு பதிவுத் தபால் அனுப்பப்பட்டது. இந்தியாவின் பிரதமராக இருந்த கிளேட்ஸ்டோன் அவர்களின் பெயரிலும் ஒரு பிரசுரம் மற்றும் கடிதம் அனுப்பப்பட்டது. அவ்வாறே இளவரசர் பிஸ்மார்க் அவர்களின் பெயரிலும் பல்வேறு நாடுகளிலுள்ள புகழ்பெற்ற தலைவர்கள் பெயரிலும், பிரசுரங்களும், கடிதங்களும் அனுப்பப்பட்டன. அவற்றால் ஒரு பெட்டி நிரம்பியிருக்கின்றது. ஈமானின் ஆற்றல் இல்லாமல் இந்தப் பணியை செய்து முடிக்க முடியாது. இதனை நான் சுய பெருமையாக கூறவில்லை. மாறாக உண்மையை வெளிப்படுத்தும் முகமாகவே கூறுகின்றேன். அதன் மூலம் உண்மையைத் தேடுபவர்களுக்கு எந்த விசயமும் சந்தேகமாக இருக்காது.

இஸ்லாத்தை ஏனைய மார்க்கங்கள் மீது வெற்றி கொள்ள வைக்கும் பணியை அவர்கள் செய்து கொண்டே சென்றார்கள். கிறிஸ்தவத்தில் பெருக்கெடுத்த வெள்ளத்தை தடுத்து நிறுத்தும் ஒரு அணையை அவர்கள் கட்டிவிட்டார்கள்.

இந்த சமயத்தில் சில்லாவில் இருப்பது அதாவது தனிமையில் பிரார்த்தனை செய்வதற்கான எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. குறிப்பாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்த அன்னார் விரும்பினார்கள். காதியானுக்கு வெளியில் சென்று தனிமையில் இருந்து துஆ செய்ய அவர்கள் எண்ணினார்கள். இந்த சமயத்தில் அல்லாஹ் அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக, **உங்களது முடிச்சு திறப்பது ஹோஸ்யாபூரில் இருக்கும்** என்று அறிவித்தான். 1886 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதி அவர்கள் ஹோஸ்யாபூரிற்கான பயணத்தை மேற்கொண்டார்கள். அங்கு சென்று தனிமையில் இறைவனிடம் துஆ செய்த சமயத்தில் இஸ்லாத்தின் முன்னேற்றம் பற்றியும் ஏனைய பல நற்செய்திகளையும் அல்லாஹ் அவர்களுக்கு தெரிவித்தான். இந்த தனிமையில் செய்த துஆ முடிந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பேனாவால் 1886 ஆம்

ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதி ஒரு பிரசுரம் ரிஸாலாயே சிராஜே முனீர் பர் நாமே ரப்பே கதீர் என்ற பெயரில் எழுதினார்கள். ரியாஸே ஹிந்த் என்ற பத்திரிகையில் 1886 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் தேதி இப்பிரசுரம் வெளியிடப்பட்டது. அதில் அவர்கள், பத்திரிகையில் பின்னர் விளக்கமாக வெளியாகவிருக்கின்ற இந்த முன்னறிவிப்புகளில் முதலாவது முன்னறிவிப்பு, இந்த எளியவன் தொடர்பான முன்னறிவிப்பாகும். இன்று 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதி அதாவது ஜமாதியுல் அவ்வலின் 12ம் தேதி எனக்கு வந்த இல்ஹாம்களில் சிலவற்றை எழுதுகின்றேன். சுருக்கமாக இவற்றை எழுதியுள்ளேன். விளக்கமாக அது பத்திரிகையில் இடம்பெறும் (இறைவன் நாடினால்).

கருணையுள்ள கண்ணியமிக்க இறைவனிடமிருந்து பெற்ற இல்ஹாமிலுள்ள முதல் முன்னறிவிப்பு இதுவாகும். கண்ணியமிக்க வல்லமையுள்ள இறைவன் இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்.

நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஓர் கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உனது துஆக்களுக்கு என்னுடைய ரஹ்மத்தினால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை வழங்கினேன். ஹோஸியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உனக்காக அருளுக்குரியதாக ஆக்கி விட்டேன். ஆகவே, உனக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகிறது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. மேலும் வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! இறைவன் இதை கூறினான். இதன் மூலம் வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்பு பெற வேண்டும். கல்லறைகளில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும் இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் வெளிப்பட வேண்டும். அதன் மூலம் உண்மை அதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும் பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடிவிட வேண்டும். மேலும் அதன் மூலம் நான் வல்லமையுள்ளவன். எதை விரும்புகின்றேனோ அதை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் உன்னுடன் இருக்கின்றேன் என்பதன் மீது அவர்கள் உறுதிகொள்ள வேண்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கையில்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைவனின் தூதர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் ஆகியவற்றின் பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு திறந்த அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் திட்டமும் வெளிப்பட்டு விட வேண்டும். உமக்கு நற்செய்தி தரப்படுகின்றது. ஒரு அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமது வித்திலிருந்து தோன்றியவராகவும் உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார். அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு புனிதா ஆன்மா வழங்கப்பட்டுள்ளது. அவர் அசுத்தத்திலிருந்தும் தூய்மையடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் இருக்கின்றது. அது அவர் வருவதுடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உள்ளவராகவும், மகத்துவமிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார். அவர் உலகத்தில் வருவார். தனது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனென்றால், இறைவனின் கருணையும் அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பியிருக்கின்றது. அவர் மிகுந்த புத்திக்கூர்மை உள்ளவராகவும் சிந்தித்துப் புரியும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். வெளிப்படையாக மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குவார். (இதன் பொருள் புரியவில்லை என்று அவர்கள் எழுதியுள்ளார்கள்.) திங்கட்கிழமை அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது பாசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவரிடமிருந்தே முதலும் இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்தே உண்மையும் உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்தது போன்று அது இருக்கும். அவருடைய வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம்

வெளிப்படுவதற்கு காரணமாக அமையும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணத்தால் நறுமணம் கமழும்படி செய்தான். நாம் நமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனின் நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் மிக விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்கு காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவிவிடும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வ கான அம்ரன் மக்ஸிய்யா இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கருணையுள்ள மகிமைமிக்க இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கியவாறு என்னிடம் இவ்வாறு கூறினான்.

உனது வீடு பரக்கத்துகளால் நிறைந்து விடும். நான் எனது அருள்களை உம்மீது நிறைவு செய்வேன். இதற்கு பிறகு உனக்கு கிடைக்கவுள்ள அருளுக்குரிய பெண்கள் மூலமாக உமது சந்ததிகள் அதிகமாகி விடுவர். நான் உனது சந்ததிகளை அதிகமாக வளர்ச்சியடையும்படி செய்வேன். அவர்களுக்கு பரக்கத்துகளை வழங்குவேன். இவர்களில் சிலர் குறைந்த வயதில் மரணித்தும் விடுவார்கள். உமது சந்ததிகள் அதிகமான நாடுகளில் பரவி விடுவார்கள். உமது தந்தை வழி சகோதரர்களின் ஒவ்வொரு கிளையும் வெட்டப்படும். அவை சந்ததிகள் இல்லாமல் அழிந்து விடும். அவர்கள் தவ்பா செய்யவில்லையென்றால் இறைவன் துன்பத்திற்கு மேல் துன்பத்தை அவர்கள் மீது இறக்குவான். எதுவரையென்றால் அவர்கள் அழிந்து விடுவார்கள். அவர்களது வீடுகள் விதவைகளால் நிரம்பி விடும். அவர்களது சுவர்கள் மீது கோபம் இறங்கும். ஆனால், அவர்கள் மனம் திருந்தி திரும்பி வந்தால் இறைவன் கருணையுடன் அவர்கள் பக்கம் திரும்புவான். இறைவன் உனது அருள்களை உமக்கு அருகிலுள்ள இடங்களில் பரப்பி விடுவான். சீர்குலைந்துபோன ஒரு வீட்டை உன் மூலமாக சரி செய்வான். அச்சத்திற்குரிய அந்த வீட்டை அருள்களால் நிரப்பி விடுவான். உமது சந்ததிகள் உம்மை விட்டும் துண்டிக்கப்பட மாட்டார்கள். இறுதி நாட்கள் வரை அவர்கள் பசுமையாக இருப்பார்கள். உலகம் துண்டிக்கப்படுகின்ற அந்த நாள் வரை இறைவன் உமது பெயரை கண்ணியத்துடன் நிலைபெறச் செய்வான். உனது அழைப்பை உலகின் எல்லை வரை எட்ட வைப்பான். நான் உன்னை உயர்த்துவேன். என் பக்கம் அழைத்துக் கொள்வேன். ஆனால் உனது பெயர் உலகை விட்டும் ஒருபோதும் எடுக்கப்படாமல் இருக்கும். உமக்கு இழிவு ஏற்பட வேண்டும் என்று கவலைப்படுகின்ற, உமக்கு தோல்வியை ஏற்படுத்த முயற்சிக்கின்ற உம்மை அழிக்க எண்ணுகின்ற அந்த எல்லா மக்களும் தோல்வி அடைந்து மரணிப்பார்கள். ஆனால், இறைவன் உம்மை முழுமையாக வெற்றி பெறச் செய்வான். உமது எல்லா ஆசைகளையும் உமக்கு நிறைவேற்றித் தருவான். உன்மீது கலப்பற்ற அன்பு வைத்துள்ள உள்ளத்தால் உன்னை நேசிக்கின்ற உமது ஒரு கூட்டத்தை நான் பெருகும்படி செய்வேன். அவர்களது உயிர்களிலும் செல்வங்களிலும் பரக்கத்தை வழங்குவேன். அவற்றை அதிகமாக்குவேன். அவர்கள் முஸ்லிம்களிலுள்ள ஏனைய பிரிவினர்களுக்கு எதிரில் கியாமத் நாளன்று மேலோங்கி நிற்பார்கள். அந்த ஏனைய பிரிவினர் பொறாமைக்காரர்களாகவும் பகைவர்களாகவும் இருப்பார்கள். இறைவன் அவர்களை மறக்கமாட்டான். அவர்களை நினைவு கூறாமல் விட்டுவிட மாட்டான். தங்களது மனத்தூய்மைக்கு ஏற்ப அவர்கள் தங்களது நற்கூலிகளைப் பெற்றுக் கொள்வார்கள். நீ எனக்கு இஸ்ரவேல் சந்ததிகளிடம் தோன்றிய நபிமார்களைப் போன்றவனாவாய். (அதாவது நிழலான முறையில் அவர்களை ஒத்தவராக நீ இருக்கின்றாய்) நீ எனக்கு எனது ஏகத்துவத்தைப் போன்று இருக்கின்றாய். நீ என்னிலும் நான் உன்னிலும் இருக்கின்றோம். அந்த நேரம் வரவிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் அது மிக அருகில் இருக்கின்றது. அப்போது இறைவன் அரசர்கள் மற்றும் செல்வந்தர்களின் உள்ளத்தில் உனது அன்பை போடுவான். எதுவரையென்றால் அவர்கள் உமது ஆடையிலிருந்து அடைக்கலம் தேடுவார்கள்.

மறுப்பவர்களே! உண்மையின் எதிரிகளே! நீங்கள் எனது அடியார் தொடர்பாக சந்தேகத்தில் இருந்தால், நமது அடியார் மீது நாம் செய்துள்ள அருள் மற்றும் பேருபகாரத்தை நீங்கள் மறுப்பதாக இருந்தால் இந்த கருணையின் அடையாளத்தைப் போன்று நீங்களும் உங்களைப் பற்றிய ஒரு உண்மையான அடையாளத்தை எடுத்துக் காட்டுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவ்வாறு எடுத்துக் காட்டுங்கள். நினைவில்

கொள்ளுங்கள்! உங்களால் ஒருபோதும் அவ்வாறு எடுத்துக்காட்ட முடியாது. அவ்வாறு காட்ட முடியவில்லை என்றால் பொய்யர்களுக்காகவும், கட்டுப்படாதவர்களுக்காகவும், வரம்புமீறி செயல்படுபவர்களுக்காகவும் தயார் செய்யப்பட்டுள்ள அந்த நெருப்பிற்கு அஞ்சுங்கள்.

**ரியாஸே ஹிந்த் என்ற பத்திரிகையில் இந்த இல்ஹாம்கள் அடங்கிய பிரசுரத்தை அவர்கள் வெளியிட்டார்கள்.**

தனிமையில் இறைவனை பிரார்த்தித்ததன் விளைவாக அவர்களுக்கு வழங்கப்பட்ட நற்செய்திகளை அவர்கள் இதில் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த நற்செய்தியில் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட ஒரு மகன் பற்றிய நற்செய்தியும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனை நீங்கள் முழுமையாக ஆய்வு செய்து பார்த்தால் அவை 52 சிறப்பு அம்சங்களாக இருக்கின்றன. ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவை 58 சிறப்பு அம்சங்கள் என்றும் கூறியுள்ளார்கள். மஸீஹ் தோன்றும்போது அவர்களுக்கு பிள்ளைகள் இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அந்த நபிமொழியை நான் உங்களுக்கு படித்துக் காட்டினேன்.

சந்ததிகள் பெரும்பாலான மக்களுக்கு இருக்கத்தான் செய்கின்றது. இதில் என்ன குறிப்பான வி-யம் இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்தார்கள் என்றால் ஏதாவது முக்கியமான விசயம் தொடர்பாகவே அவர்கள் முன்னறிவிப்பு செய்திருப்பார்கள். அது அந்த மஸீஹிற்கு பிறக்கும் பிள்ளைகளிடம் எப்படிப்பட்ட சிறப்பம்சங்கள் இருக்குமென்றால் அது மார்க்கத்தைப் பரப்பக் காரணமாகி விடும். தவ்ஹீதை பரப்புவதற்குக் காரணமாக அமையும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதியை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்கு அவை காரணமாக அமையும். இந்த முன்னறிவிப்பிற்கு ஏற்ப 1889 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பிறந்தார்கள். அந்த வருடத்தில் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் வாங்கினார்கள். பைஅத் வாங்குவதற்காக கட்டளையையும் அந்த வருடம் தான் அல்லாஹ் அவர்களுக்கு அறிவித்தான். இவ்வாறு இந்த வருடம்தான் முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காக அடித்தளம் நடப்பட்டது.

அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள அந்த அடையாளங்கள் அல்லது சிறப்பு அம்சங்கள் பற்றி நான் கூறவுள்ளேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எந்த வருடத்தில் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி நான்தான் என்று அறிவித்தார்களோ அந்த வருடத்தில் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தும்போது, அவை 52 அடையாளங்களாகும் என்று கூறியுள்ளார்கள். அந்த அடையாளங்களை நான் இப்போது கூறுகின்றேன்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த முன்னறிவிப்பை கவனமாகப் படித்தால் அதில் தோன்றவிருக்கும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதிக்கான இந்த அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன.

முதல் அடையாளம் – அவர் இறைவனின் வல்லமையின் அடையாளமாக இருப்பார்.

2. அவர் கருணையின் அடையாளமாக இருப்பார்.
3. இறை நெருக்கத்தின் அடையாளமாக இருப்பார்.
4. அவர் அருளின் அடையாளமாக இருப்பார்.
5. அவர் இறைவனின் பேருபகாரத்தின் அடையாளமாக இருப்பார்.
6. அவர் ஆற்றல்மிக்கவராக இருப்பார்.
7. அவர் மகிமைக்குரியவராக இருப்பார்.

8. அவர் செல்வம் நிறைந்தவராக இருப்பார்.

9. அவர் மஸீஹின் நஃப்ஸைக் கொண்டவராக இருப்பார்.

10. உண்மையான ஆன்மாவின் பரக்கத்தால் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார்.

11. அவர் இறைவனின் வார்த்தையாக இருப்பார்.

12. இறைவனின் கருணையும் தன்மான உணர்வும் அவரை தனது மகிமைமிக்க வார்த்தைகளுடன் அனுப்பும்.

13. அவர் மிகுந்த புத்திக்கூர்மை உள்ளவராக இருப்பார்.

14. அவர் மிகுந்த புரியும் திறன் கொண்டவராக இருப்பார்.

15. அவர் மென்மையான உள்ளம் கொண்டவராக இருப்பார்.

16. அவர் வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார்.

17. அவர் அந்தரங்க அறிவுகளால் நிரப்பப்படுவார்.

18. அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார்.

19. திங்கட்கிழமையுடன் அவருக்கு குறிப்பான தொடர்பு இருக்கும்.

20. அவர் பாசமிக்க புதல்வராக இருப்பார்.

21. கண்ணியத்திற்குரியவராகவும், மேன்மைக்குரியவராகவும் இருப்பார்.

22. அவர் ஆரம்பத்தை வெளிப்படுத்தக் கூடியவாக இருப்பார்.

23. அவர் இறுதியை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.

24. அவர் உண்மையை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.

25. அவர் உயர்வை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.

26. அல்லாஹ் வானத்திலிருந்து இறங்கியது போல் என்ற கூற்றுக்குப் பொருத்தமானவராக அவர் இருப்பார்.

27. அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாக இருக்கும்.

28. அவரது வருகை இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும்.

29. அவர் ஒளியாக இருப்பார்.

30. அவர் இறை திருப்தியின் நறுமணத்தால் நறுமணம் கமழும்படி செய்யப்பட்டிருப்பார்.

31. இறைவன் தனது ஆவியை அவர் மீது இடுவான்.

32. இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும்.

33. அவர் மிக விரைவாக வளர்வார்.

34. அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார்.

35. அவர் பூமியின் எல்லை வரை பிரசித்திப் பெற்று விடுவார்.

36. சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும்.

37. அவர் தனது இறுதி நோக்கத்தை அடைந்து விண்ணின் பக்கம் உயர்த்தப்படுவார்.

38. அவர் காலதாமதமாக வருபவராக இருப்பார்.

39. அவர் தொலைவிலிருந்து வருபவராக இருப்பார்.

40. தூதர்களின் பெருமையாக அவர் திகழ்வார்.

41. அவரது வெளிப்படையான அருள்கள் பூமி முழுவதும் பரவிவிடும்.

42. அவரது அந்தரங்கமான அருள்கள் பூமி முழுவதும் பரவிவிடும்.

43. யூசுபைப் போன்று அவரது மூத்த சகோதரர்கள் அவர்களை எதிர்பார்ப்பார்கள்.

44. அவர் பஷீருத் தௌலாவாக ஆட்சி தொடர்பான நற்செய்திகளைக் கூறுபவராக இருப்பார்.

45. அவர் திருமணங்கள் முடிப்பவராக இருப்பார்.

46. அவர் ஆலமே கவ்வாப் ஆக இருப்பார்.

47. அவர் அழகிலும், நன்மைகள் செய்வதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இணை ஆனவராக இருப்பார்.

48. அவர் கலிமத்துல் அஸீஸ் – பிரியமான வார்த்தையாக இருப்பார்.

49. அவர் இறைவார்த்தைகளைக் கொண்டவராக இருப்பார். (கலிமத்துல்லாஹ் கான்)

50. அவர் மார்க்கத்தின் உதவியாளராக இருப்பார்.

51. அவர் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யக்கூடியவராக இருப்பார்.

52. அவர் இரண்டாவது பஷீராக இருப்பார்.

இந்த அடையாளங்களில் ஒவ்வொன்றையும் ஒரு சொற்பொழிவின் தலைப்பாக அமைக்கலாம். அவற்றை விரிவாகக் கூற நேரமில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் 52 வருடகால கிலாஃபத்தைப் பார்த்தால் இந்த ஒவ்வொரு அடையாளமும் அவர்களிடம் காணப்படுகிறது. அதை விரிவாக கூற நேரமில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த முன்னறிவிப்பை வெளியிட்டதும் அந்த சமயத்தில் பண்டிட் லேக்ராம் மிகவும் கீழ்த்தரமான சொற்களில் ஒவ்வொரு முன்னறிவிப்பிற்கு எதிரிலும் தனது ஒழுக்க சீர்குலைவை வெளிப்படுத்தியவாறு அவர் கூறியவற்றில் சிலவற்றை நான் கூறுகிறேன்.

1886 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் தேதி மிகவும் இழிவான சொற்களில் இறைவன் தன்னிடம் கூறியதாக இட்டுக்கட்டி கூறி ஒரு பிரசுரத்தை அவர் வெளியிட்டார். இறைவனது கட்டளைக்கேற்ப ஒவ்வொரு எழுத்தையும் தான் எழுதுவதாக அவர் வாதம் செய்தார்.

நான் உனது சந்ததிகளை அதிகமாக பெருக்குவேன் என்று இறைவன் கூறியதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறியிருந்தார்கள். அதற்கு எதிரில் தன்னிடம் இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சந்ததிகளின் தொடர் விரைவில் துண்டிக்கப்படும் என்று கூறியதாக லேக்ராம் எழுதியுள்ளான்.

அதிகபட்சம் மூன்று வருடங்கள் வரை தான் இந்த சந்ததிகளின் புகழ் நீடிக்கும். அவ்வாறு அவருக்கு மகன் பிறந்தாலும் அவர் செய்த முன்னறிவிப்பில் குறிப்பிட்டபடி அது கருணையின் அடையாளமாக இருக்காது. இழிவின் அடையாளமாக இருக்கும். அவர் முஸ்லிஹ் மவ்வூது அதாவது வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருக்கமாட்டார். முவ்ஸித் மவ்வூது அதாவது வாக்களிக்கப்பட்ட குழப்பவாதியாக இருப்பார் (நவூதுபில்லாஹ்) என்றெல்லாம் லேக்ராம் எழுதியிருந்தார்.

வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பாக கூறப்பட்டிருந்த ஒவ்வொரு அடையாளத்தையும் தீய சொற்களைக் கூறும் இவர் தன்னால் இயற்றப்பட்ட முன்னறிவிப்புகளின் வடிவில் அவற்றை இட்டுக்கட்டி கூறினார். இவரோ இந்துவாக இருந்தார். இவரை எதிர்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சவால் விடுத்திருந்தார்கள். சில கிறித்தவ பாதிரிமார்களும் இதுபோன்ற வி-யங்களைக் கூறியிருந்தார்கள். ஆனால் தன்னை முஸ்லிம்கள் என்று கூறிக் கொண்டவர்களில் சிலரும் தங்களது இழிவான நடத்தையை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இவர்களின் இந்த விசயங்களைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் அவர்கள் கூறினார்கள்:

கண்களைத் திறந்து பார்க்க வேண்டும். இது முன்னறிவிப்பு மட்டுமல்ல. மாறாக, இது மகத்தான வானத்தின் அடையாளமாக இருக்கின்றது. கருணைமிக்க இறைவன் நமது நபி கரீம் ரவூஃபுர் ரஹீம் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக இந்த அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். உண்மையில் இந்த அடையாளம் மரணித்த ஒருவரை உயிர்ப்பிப்பதை விட நூறு மடங்கு உயர்வானதும், சிறப்பானதும், முழுமையானதும் ஆகும். ஏனென்றால, மரணித்தவர்களை உயிர்ப்பிப்பதன் உண்மை நிலை என்னவென்றால் இறைவன் முன் நின்று துஆ செய்தவாறு ஒரு ரூஹை மீண்டும் அழைப்பதேயாகும். இந்த இடத்தில் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் பரக்கத்தால் கருணைமிக்க இறைவன் அந்த துஆவை ஏற்றுக் கொண்டவாறு எத்தகைய அருளுக்குரிய ரூஹை அனுப்புவதாக வாக்குறுதி அளித்துள்ளானென்றால் அதன் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அருள்கள் பூமி முழுவதும் பரவிவிடும். வெளிப்படையாகப் பார்க்கும் போது இந்த அடையாளம் மரணித்தவர்களை உயிர்ப்பிப்பதற்கு சமமான ஒன்றாக தெரிந்தாலும் சிந்தித்துப் பார்த்தால் இந்த அடையாளம் மரணித்தவர்களை உயிர்ப்பிப்பதை விட நூறு மடங்கு சிறந்தது என்பது தெரிய வரும். மரணித்தவர்களின் ரூஹும் துஆவின் மூலமாக மீண்டும் திரும்பி வருகிறது. இந்த இடத்திலும் துஆவின் மூலம் ஒரு ரூஹ் தான் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆன்மாக்களுக்கும் இந்த ரூஹிற்கும் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் வித்தியாசமாக இருக்கின்றது. முஸ்லிம்களின் எவர் மறைவாக முர்தத்துகளாக இருக்கிறார்களோ அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் வெளிப்படுவதைக் கண்டு மகிழ்ச்சியடையமாட்டார்கள். மாறாக, அவ்வாறு ஏன் நடந்தது என்று கூறுகின்றார்கள். அவர்களுக்கு இதனால் பெரும் துயரம் ஏற்படுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் 52 வருடகால கிலாஃபத் காலத்தில் அவர்கள் எவ்வாறு விரைவாக வளர்ந்தார்கள். பிரச்சார நிலையங்களும், பள்ளிவாசல்களும் உலகெங்கும் எவ்வாறு நிறுவப்பட்டது என்பதை நாம் பார்க்கும் போது அவர்களது காலத்தில் ஜமாஅத்தின் வசதிகள் மிகக் குறைவாகவே இருந்தது. விரிவான பொருளாதார நிலை ஜமாஅத்திற்கு இருந்ததில்லை. அப்படியிருந்தும் கூட உலகிலுள்ள 34 நாடுகளில் அவர்கள் ஜமாஅத்தை நிறுவியிருந்தார்கள். பல மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்யப்பட்டிருந்தது. பல இடங்களில் பிரச்சார நிலையங்கள் திறக்கப்பட்டது. ஜமாஅத் அமைப்பின் வடிவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களே உருவாக்கினார்கள். இது இன்று வரை நீடித்திருக்கிறது. இதை விட சிறந்த அமைப்பை யாரும் உருவாக்க முடியாது. இவ்வாறே கிளை அமைப்புகளும் இன்று வரை செயல்படுகின்றன. அவர்கள் செய்த ஒவ்வொரு பணியும் அவர்களது புத்திக் கூர்மைக்கும் புரியும் திறனுக்கும் தெளிவான சான்றாகத் திகழ்கின்றது. திருக்குர்ஆனுக்கு அவர்கள் எழுதியுள்ள விளக்கங்கள் ஏனைய அறிவுப்பூர்வமான பணிகள் அவர்கள் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் நிரப்பப்பட்டிருப்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

இங்கு ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே தனது இந்த மகனான பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் தொடர்பாக அவர்களை முஸ்லிஹ் மவ்வூத் என்றே கருதி வந்தார்கள். ஹஸ்ரத் ே-க் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் சஸ்தாவி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

நாங்கள் பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து கேட்டிருக்கின்றோம். ஒருமுறை அல்ல; பலமுறை அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கிறோம். அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். அதாவது முன்னறிவிப்பில் எந்த மகனைப் பற்றி குறிப்பிட்டுள்ளதோ அவர் மியான் மஹ்மூத் ஆவார்கள் என்று கூறினார்கள். மேலும் மியான் மஹ்மூதிடம் எந்த அளவு மார்க்கத்திற்கான உணர்வு உள்ளது என்றால் நான் சில நேரங்களில் அவருக்காக துஆ செய்கின்றேன் என்றும் அவர்கள் கூறி வந்தார்கள்.

எதுவரை இறைவன் அறிவிக்கவில்லையோ அதுவரை முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் அந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டவர் தாம் தான் என்று கூறியதேயில்லை.

இது தொடர்பாக ஒரு நீண்ட (ருஹ்யா) ஆன்மீகக் காட்சி அவர்களுக்கு காட்டப்பட்டது. அது பற்றி அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்தக் காட்சியில் கஷ்ஃப் மற்றும் இல்ஹாமும் இடம்பெற்றிருக்கிறது. அந்தக் காட்சி பற்றி விளக்கிக் கூறி விட்டு அதன் இறுதியில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் இறைவனின் கட்டளைக்கேற்ப அவன் மீது ஆணையிட்டு இவ்வாறு அறிவிப்பு செய்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இறைவன் என்னை பூமியின் எல்லை வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பெயரை எட்ட வைக்கின்ற அந்த வாக்களிக்கப்பட்ட மகனாக ஆக்கியுள்ளான்.

இந்த ஆன்மீகக் காட்சியைக் கண்ட பிறகு, 1944 ஆம் ஆண்டு அவர்கள் கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பாக ஜமாஅத்தைச் சாராத சிலரின் சாட்சிகளைக் கூற விரும்புகின்றேன். கண்ணியத்திற்குரிய ஒரு அஹ்மதியல்லாத ஆலிம் மவ்லவி சமியுல்லாஹ் கான் சாஹிப் ஃபாருகி என்பவர் பாகிஸ்தான் தோன்றுவதற்கு முன்பு இஸ்ஹாரே ஹக் என்ற பெயரில் ஒரு பிரசுரத்தில் இவ்வாறு எழுதுகின்றார்:

அவர்களுக்கு (ஹஸ்ரத் மவ்வூது (அலை) அவர்களுக்கு) நான் உனது ஜமாஅத்திற்காக உனது சந்ததிகளிலிருந்து ஒரு நபரை நிறுத்துவேன். அவருக்கு குறிப்பாக எனது நெருக்கத்தையும் எனது வஹியையும் தந்து சிறப்பிப்பேன். அவர் மூலமாக உண்மை மேலோங்கும். பலரும் உண்மையை ஏற்றுக் கொள்வார்கள் என்ற தகவல் அவர்களுக்கு தரப்படுகிறது. இந்த முன்னறிவிப்பை மீண்டும் மீண்டும் படியுங்கள். பிறகு ஈமானுடன் இந்த முன்னறிவிப்பு நிறைவேறவில்லையா? என்பதையும் கூறி விடுங்கள். எப்போது இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ அப்போது இப்போதிருக்கும் கலீஃபா அவர்கள் சிறுவராக இருந்தார்கள். மிர்ஸா சாஹிப் தரப்பிலிருந்தும் அவரை கலீஃபாவாக ஆக்குவது தொடர்பாக எந்த வஸிய்யத்தும் செய்யப்படவில்லை. மாறாக, கிலாஃபத்தின் தேர்தல் பொதுமக்களின் கருத்திற்கேற்பவே நடந்தது. அப்போது பெரும்பாலார் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் அவர்களை கலீஃபாவாக ஏற்றுக் கொண்டார்கள். அப்போது எதிரிகள் வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக இந்த முன்னறிவிப்பை பரிகாசம் செய்தனர். ஆனால், ஹக்கீம் சாஹிபின் வஃபாத்திற்குப் பிறகு மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இது உண்மையாகும். அதாவது அவர்களின் காலத்தில் அஹ்மதிய்யத் எந்த அளவு முன்னேறி விட்டது என்றால், அது மிகவும் வியப்பிற்குரியதாக இருக்கின்றது.

**தொடர்ந்து அவர் எழுதுகின்றார்:**

மிர்ஸா சாஹிப் அவர்களே (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில்) அஹ்மதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. கலீஃபா நூருத்தீன் சாஹிபின் காலத்திலும் குறிப்பான எந்த முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால், தற்போதைய கலீஃபாவின் காலத்தில் அஹ்மதிய்யத் உலகில் ஏறக்குறைய எல்லா பகுதிகளிலும் சென்றடைந்து விட்டது. தற்போதைய நிலைமை தெரிவிப்பது என்னவென்றால் வருங்காலத்தில் நடைபெறும் கணக்கெடுப்பின் போது மிர்ஸாயீகளின் எண்ணிக்கை 1921 ஆம் ஆண்டு இருந்ததை விட இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து விடும். இவர்களது காலத்தில் மிர்ஸாயீகளை வீழ்த்துவதற்காக எதிரிகள் தரப்பிலிருந்தும் எந்த அளவு அமைப்புரீதியாக முயற்சி செய்யப்பட்டனவோ அந்த அளவுக்கு இதற்கு முன்பு முயற்சிகள் செய்யப்பட்டதில்லை. சுருக்கமாகக் கூறுவதென்றால், முன்னறிவிப்பிற்கேற்ப ஒரு நபர் ஜமாஅத்திற்காக நிறுத்தப்பட்டார். அவர் மூலமாக ஜமாஅத்திற்கு வியக்கத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டது. இதன் மூலம் மிர்ஸா சாஹிபின் இந்த முன்னறிவிப்பு வரிக்கு வரி நிறைவேறி விட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவிலிருந்த முஸ்லிம் அல்லாத ஒரு சீக்கிய பத்திரிகையாளர் அர்ஜுன் சிங் அவர்கள் ரங்கீன் என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஆக இருந்தார். 1901 ஆம் ஆண்டு மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் அவர்கள் சிறுவரக இருந்த சமயத்தில் இந்த முன்னறிவிப்பை அவர் செய்துள்ளார். முன்னறிவிப்பாக அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதை வரிகளைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது,

உமது ஒரு மகன் எனது நேசராக இருப்பார். அந்த சந்திரன் மூலமாக நான் இருள்களை அகற்றி விடுவேன். உலகம் அவர் பக்கம் திரும்பியிருப்பதைக் காட்டுவேன் என்று இறைவன் எனக்கு நற்செய்தி கூறியுள்ளான். அது நற்செய்தி மட்டுமல்ல. அது உள்ளத்திற்கு கிடைத்த உணவாகும். எனது எதிரிகளை இழிவடையச் செய்த என் இறைவன் தூயவன்.

உண்மையில் இந்த முன்னறிவிப்பு வியப்பூட்டக் கூடியதாகும். 1901 –ல் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்கள் பெரிய ஆலிமாக இருக்கவில்லை. அரசியலில் அவர்களுக்கிருந்த திறமைகளும் அப்போது வெளிப்படவில்லை. அந்த சமயத்தில் உமது ஒரு மகன் இப்படியெல்லாம் இருப்பார் என்று கூறுவது நிச்சயமாக ஒரு ஆன்மீக ஆற்றலுக்கான ஆதாரமாக இருக்கின்றது. மிர்ஸா சாஹிப் தனக்குப் பிறகு தனது சந்ததிகளில் ஒருவரை தனது ஆட்சிப் பீடத்தில் அமர்த்தும்படி கூறியிருந்தால் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மதிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் கூற முடியும். ஆனால் இந்த எண்ணம் தவறாகும். ஏனென்றால் மிர்ஸா சாஹிப் கிலாஃபத்திற்காக எந்த நிபந்தனையும் வைக்கவில்லை. கிலாஃபத்திற்காக தனது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லது தமது பிள்ளைகள்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் ஒருபோதும் கூறவில்லை. முதலாவது கலீஃபா அவர்களுக்கு மிர்ஸா சாஹிபின் குடும்பத்துடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் அவர்களுக்குப் பிறகு கூட வேறு யாராவது கலீஃபாவாக ஆவதற்கான வாய்ப்புகளும் இருந்தன.

இந்த சமயத்தில் லாஹூர் ஜமாஅத்தின் அமீராக இருந்த மவ்லவி முஹம்மதலி சாஹிப் அவர்களும் கிலாஃபத்திற்காக தேர்ந்தெடுக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஏறக்குறைய அனைத்து மக்களும் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிபிற்கு துணையாக இருந்தார்கள். இவ்வாறு அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**தொடர்ந்து எழுதுகின்றார்:**

கேள்வி என்னவென்றால் பெரிய மிர்ஸா சாஹிபிடம் எந்த ஆன்மீக ஆற்றலும் செயல்படாமல் இருந்திருந்தால் அவர்களுக்குப் பிறகு இந்த நிலை எவ்வாறு உருவாகியிருக்க முடியும். அவர்கள் நான் மேற்கூறிய முன்னறிவிப்பை செய்த சமயத்தில் அவர்களுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அந்த மூவருக்கும் அவர்கள் துஆவும் செய்திருந்தார்கள். ஆனால் முன்னறிவிப்பு ஒருவரைப் பற்றி மட்டுமே இருந்தது. உண்மையில் நாம் பார்க்கின்றோம். முன்னறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி அவர் இவ்வுலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டார்.

வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக அவர் உறுதியான எண்ணம் கொண்டவராக இருப்பார் என்ற இறை வாக்குறுதி இருந்தது. அவ்வாறே அவர் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்றும் முன்னறிவிப்பில் உள்ளது. புகழ்பெற்ற இந்திய பத்திரிகையாளர் காஜா ஹஸன் நிஸாம் தஹ்லவி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார். முஸ்லிஹ் மவ்வூது தொடர்பாக எழுதுகின்றார்:

பெரும்பாலும் அவர் நோயாளியாகவே இருந்தார். ஆனால் நோய் அவரது செயல் அளவிலான முயற்சிகளில் எந்தத் தடங்களையும் ஏற்படுத்த முடியவில்லை. எதிர்ப்புகளின் புயல் வீசிய போது நிம்மதியாக பணிகளைச் செய்து தனது முகலாய வம்சத்தின் வீரத்தையும் ஆண்மையையும் நிரூபித்துக் காட்டி விட்டார். முகலாய வம்சத்தைச் சேர்ந்தவர்களின் பணியில் அதை அவர்கள் செய்யும்போது அதற்கென்று ஒரு குறிப்பான வழிமுறை இருக்கும். அரசியலில் புரியும் திறன் பெற்றவராகவும், மார்க்கத்தில் வலுவான அறிவுள்ளவராகவும் அவர்கள் இருக்கின்றார்கள். போர்த் திறமைகள் பற்றியும் அவருக்குத் தெரியும். அதாவது பேனா மற்றும் மூளை மூலம் போர் புரிவதில் அவர் திறமை பெற்றவராக இருக்கின்றார்.

வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார் என்ற ஒரு செய்தியும் கூறப்பட்டிருந்தது. இந்த முன்னறிவிப்பு எந்த அளவு வியப்பூட்டும் வகையில் நிறைவேறி உள்ளது என்றால் அது மனித அறிவை வியப்பில் ஆழ்த்தி விட்டது. காஷ்மீர் விடுதலை இயக்கம் இதற்கு சாட்சியாக விளங்குகிறது. இதனை வெற்றிகரமாக செயல்பட வைப்பது அகில இந்திய காஷ்மீர் கமிட்டியின் பொறுப்பில் இருந்தது. இந்த புகழ்பெற்ற இயக்கம் ஹுஸுர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இந்தியாவின் பெரும் முஸ்லிம் அறிஞர்களாக ஸுல்ஃபிகார் அலி சாஹிப், சர் முஹம்மது இக்பால் சாஹிப், காஜா ஹஸன் நிஸாமி தெஹ்லவி, ஸியாயத் பத்திரிகையின் ஆசிரியரான ஸெய்யது ஹபீப் ஆகியோரின் ஆலோசனைக்கு ஏற்பவும் இந்த கமிட்டி 1931 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25ம் தேதி சிம்லாவில் நிறுவப்பட்டது. மேலும் இந்த கமிட்டியின் தலைமை பொறுப்பு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களின் வெற்றிகரமான தலைமையின் விளைவாக மனிதத்தன்மையின் தலைமையின் விளைவாக மனிதத் தன்மையின் அடிப்படை உரிமைகளிலிருந்தும் ஒரு நீண்ட காலமாக விலக்கப்பட்டிருந்த காஷ்மீர் முஸ்லிம்கள், அடிமைகளாக வாழ்ந்து அவர்கள் மிகக் குறுகிய காலகட்டத்தில் விடுதலை பெற்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க தொடங்கினார்கள். அவர்களது அரசியல் மற்றும் சமூக உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. காஷ்மீர் பிரதேசத்தில் முதல் முறையாக சட்டசபை நிறுவப்பட்டது. பேச்சு, எழுத்து சுதந்திரத்துடன் செயல்படும் வகையில் சட்டசபையில் அவர்கள் பிரதிநிதிகளாக செயல்பட முடிந்தது. முஸ்லிம் செய்தி நிறுவனம் இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகத்தான பணிகளை எடுத்துக்கூறி அவர்களைப் பாராட்டியவாறு எழுதும்போது எந்தக் காலத்தில் காஷ்மீரின் நிலை மிகவும் அபாயகரமானதான இருந்ததோ அந்த காலத்தில் எவர்கள் தங்களுக்கு கொள்கைரீதியான கருத்து வேறுபாடுகள் இருந்தும்கூட மிர்ஸா சாஹிபை இதன் தலைவராக தேர்ந்தெடுத்தார்களோ அவர்கள் பணியில் கிடைக்கும் வெற்றியை கண்முன் நிறுத்தி சிறந்த நபரைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அந்த சமயத்தில் கொள்கைரீதியான கருத்து வேறுபாட்டின் காரணமாக அந்த சமயத்தில் அவர்கள் மிர்ஸா சாஹிபை தலைவராக தேர்ந்தெடுக்காமல் இருந்திருந்தால் பிறகு இந்த விடுதலை இயக்கம் முற்றிலுமாக தோல்வியைத் தழுவியிருக்கும். இதனால் கண்ணியமிக்க இந்த உம்மத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கும்.

அப்துல் மஜீத் சாலிக் சாஹிப் காஷ்மீர் விடுதலை இயக்கம் தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்:

காஷ்மீர் சிங்கமான சேக் முஹம்மது அப்துல்லாஹ் அவர்களும் மற்ற பணியாளர்களும் சாஹிப்ஸாதா மிர்ஹா மஹ்மூது சாஹிப் அவர்களுடனும் அவர்களுக்கு துணையாக இருந்த மற்ற பணியாளர்களுடனும் வெளிப்படையாக தொடர்பு வைத்திருந்தனர். இந்த தொடர்புக்கான முக்கிய காரணம் மிர்ஸா சாஹிப் பெரும்பாலான நபர்களுடன் தொடர்பு வைத்திருந்ததால் காஷ்மீர் விடுதலை இயக்கத்திற்காக அவர்கள் பல வகையில் உதவிபுரிந்து வந்தார்கள். காஷ்மீர் பணியாளர்களும் இயல்பாகவே அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள்.

அல்லாமா நியாஸ் பதஹ்பூரி சாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூதுடைய புகழ்பெற்ற தப்ஸீரே கபீரைப் படித்து விட்டு அது தொடர்பாக இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹிற்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

தப்ஸீரே கபீரின் மூன்றாவது பாகம் இப்போது என் கண் முன்னால் இருக்கின்றது. அதை நான் ஆழ்ந்த பார்வையுடன் பார்க்கின்றேன். திருக்குர்ஆனைப் படிப்பதில் ஒரு புதிய சிந்திக்கும் திறனை நீங்கள் உருவாக்கி விட்டீர்கள். இந்த தப்ஸீர் தனது சிறப்புத் தன்மைக்கு ஏற்ப முற்றிலும் முதன்மைவாய்ந்த தப்ஸீராக இருக்கிறது. இதில் அறிவும் எழுத்தும் அழகாக ஒன்று சேர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. உங்களது கடல்போன்ற அறிவு, உங்களது தொலைநோக்குப் பார்வை, வழக்கத்திற்கு மாற்றமான உங்களது சிந்தனை, உங்களது அழகான ஆதாரங்கள் ஆகியவை இந்த தப்ஸீரிலுள்ள ஒவ்வொரு எழுத்திலிருந்தும் மிகவும் தெளிவாக தெரிகிறது. நான் இதைப் பற்றி இந்த சமயம் வரை ஏன் தெரியாமல் இருந்து விட்டேன் என்று நான் வேதனைப்படுகின்றேன். அந்தோ! இந்த தப்ஸீரின் எல்லா பாகங்களையும் என்னால் பார்க்க முடியுமென்றால் அது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். நேற்று ஹுது அதிகாரத்தின் விளக்கவுரையில் ஹஸ்ரத் லூத் (அலை) அவர்கள் தொடர்பாக

உங்களது எண்ணங்களைத் தெரிந்து எனது உள்ளம் கலங்கி விட்டது. நீங்கள், இதோ எனது பெண் மக்கள் உள்ளனர் என்ற சொற்களுக்கு விளக்கமளித்தவாறு பொதுவாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறும் கருத்துக்களிலிருந்தும் விலகி நின்றவாறு கூறிய கருத்துக்கள் என்னை இந்த கடிதம் எழுதும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கியது. அதைப் பாராட்டுவது எனக்கு சாத்தியமில்லாத ஒன்றாகும். இறைவன் உங்களை நீண்ட காலமாக நலமாக வைப்பானாக. 1963 ஆம் ஆண்டு அவர் இந்த கருத்தை எழுதியுள்ளார்.

மவ்லானா அப்துல் மாஜித் தர்யாபாதி திருக்குர்ஆன் விரிவுரையாளராக இருந்தவர் ஸித்கே ஜதீத் என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் வஃபாத் ஆன போது இவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆனின் ஞானங்களை உலக அளவில் பரப்புவதிலும் இஸ்லாத்தை முழு உலகிலும் தப்லீக் செய்வதிலும் இவர் எந்த அளவு உறுதியுடனும் உணர்வுடனும் தனது நீண்ட வாழ்வில் தொடர்ந்து பணியாற்றியுள்ளார் என்றால் அதற்குரிய நற்கூலியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. அறிவுப்பூர்வமான விசயங்களை கூறுவதில் அவர் கூறுகின்ற விளக்கங்களும் பொருளும் தன்னகத்தே ஒரு உயர்வான அந்தஸ்த்தை பெற்றிருக்கின்றது. இந்த முன்னறிவிப்பின் பின்னணி தொடர்பாக நான் சுருக்கமாக கூறி விட்டேன். மேலும் அது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்கள் மூலம் எவ்வாறு நிறைவேறியது என்பதையும் கூறி விட்டேன். அவர்களது அறிவிப்பூர்வமான பணிகள் உலகிற்கு புதிய வழிமுறைகளை கற்றுத் தரக்கூடியவையாக இருக்கின்றது. இதை உலகமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்கான சில உதாரணங்களை நான் எடுத்துக் கூறினேன். சமுதாயம், பொருளாதாரம், அரசியல், மார்க்கம், ஆன்மீகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய எல்லா வி-யங்கள் தொடர்பாக எப்போது அவர்கள் எழுதியிருந்தாலும் அல்லது அதற்காக சொற்பொழிவாற்ற நின்றாலும் அல்லது தனது ஆலோசனைகள் மூலம் முஸ்லிம் உம்மத்திற்கும் உலகிற்கும் வழிகாட்டினாலும் இந்த எல்லா நிலையிலும் எவரும் அவர்களது கடல் போன்ற அறிவு, தொலைநோக்குப் பார்வை, அவர்களது புத்திக்கூர்மை, ஆன்மீக ஆற்றல் ஆகியவற்றால் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியாது.

அவர்கள் உலகின் சீர்திருத்தத்திற்காக முஸ்லிஹ் மவ்வூதாக அதாவது வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருந்தார்கள். அல்லாஹ் அதற்காகவே அவர்களை அனுப்பினான். அதில் ஆன்மீகம், நல்லொழுக்கம் தொடர்பான எல்லா விதமான சீர்திருத்தமும் அடங்கும். குத்பா பேருரைகளை தவிர எண்ணற்ற புத்தகங்களை அவர்கள் எழுதியுள்ளார்கள். சொற்பொழிவுகளும் நிகழ்த்தியுள்ளார்கள். இவை எழுத்து வடிவில் வந்த போது அல்லது இனி வருகின்ற போது பெரும் பொக்கிஸங்களாக அவை திகழும். அவர்களது வஃபாத்திற்கு பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஃபஸ்ல் உமர் ஃபவுண்டேசனை நிறுவினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் எல்லா கருத்துகளையும் இது புத்தக வடிவில் வெளியிடுகிறது. இன்று வரை இந்தப் பணி நீடித்து வருகிது. குத்பாக்களை தவிர, இதுவரை இதன் 21 பாகங்கள் அன்வாருல் உலூம் என்ற பெயரில் வெளிவந்து விட்டன. இதன் ஒவ்வொரு பாகமும் குறைந்தபட்சம் 600 அல்லது 700 பக்கங்கள் கொண்டவையாக இருக்கின்றன.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியவாறு ஃபஸ்லே உமர் ஃபவுண்டேசனிடம் நான் கூறிக் கொள்கிறேன். உங்களது பணியில் நீங்கள் விரைவாக செயல்பட வேண்டும். புத்தகங்கள் வெளியிடும் பணியை அவர்கள் விரைவாக செய்து முடிக்க வேண்டும். உருது மொழியில் இவை ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை பல்வேறு மொழிகளில் வெளியிடவும் வேண்டும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

உலகின் பல்வேறு மொழிகளை ஒரு குறுகிய காலகட்டத்தில் ஒன்றுசேர்த்து அல்லாஹ் நமக்கு பணிகளை எளிதாக்கி விட்டான்.

பல மொழிகள் இருந்தாலும் சில புகழ்பெற்ற மொழிகள் உலகை கைப்பற்றி வைத்திருக்கின்றது. உருது, அரபியைத் தவிர ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் போன்ற மொழிகள் உலகில் பேசப்பட்டு புரியப்பட்டு வருகிறது. இவற்றிலும் நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டால் பிறகு 90% மக்களுக்கு நமது தூதுச் செய்தி எட்டி விடும் என்ற கருத்தையே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூதின் சில புத்தகங்கள் வெளிவந்து விட்டன. ஆனால் உலகின் அறிவு, ஆன்மீகம் ஆகியவற்றின் தாகத்தை தணிப்பதற்காக இன்னும் பல்வேறு நூல்களை மொழியாக்கம் செய்ய வேண்டியதுள்ளது. இதுவரை மொழியாக்கப் பணிகளை மற்ற துறைகளும் செய்து வருகின்றது. ஃபஸ்லே உமர் ஃபவுண்டேசன் இதை செய்யவில்லை. ஆனால் உண்மையில் இந்த பணிகளையும் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேசன் தான் செய்ய வேண்டும். முதலில் இதனை அவர்கள் செய்யாமல் இருந்தாலும் இப்போது இதன் பக்கம் நான் அவர்களுக்கு கவனமூட்டுகிறேன். ஏனென்றால், ஜமாஅத்தின் ஏனைய துறைகள் முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை வெளியிடுவதில் முதலில் கவனம் செலுத்தும். முடிந்த அளவு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் நூல்களும் மொழியாக்கம் செய்யப்படுகிறது. மற்ற ஜமாஅத் நூல்களும் மொழியாக்கம் செய்யப்படுகிறது. எனவே ஃபஸ்லே உமர் ஃபவுண்டேசன் இந்த பணியை விரிவாகவும் விரைவாகவும் செய்ய வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூதின் நூல்கள் மொழியாக்கம் செய்யப்படாமல் இருப்பதால் சிலர் இந்த நூல்களிலிருந்து கருத்துக்களை திருடியும் இருக்கின்றார்கள். அவர்களது புத்தகங்களிலிருந்து விசயங்களை எடுத்து அவற்றை மொழிபெயர்த்து அதனை தமது பெயரில் வெளியிடவும் செய்கின்றார்கள். இப்போது அரபி டெஸ்க் –ன் ஒரு முரப்பி சாஹிப் என்னிடம் இவ்வாறு கூறினார்.

மின்ஹாஜுத் தாலிபீன் என்ற முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஒரு நூல் நல்லொழுக்கம் மற்றும் தர்பிய்யத் பற்றி எடுத்துக் கூறும் ஒரு சிறந்த நூலாகும். இதன் கருத்துக்களை எடுத்து அதை அரபியில் மொழிபெயர்த்து ஒரு நபர் அதை தனது பெயரில் நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். அவருக்கு உருதுவும் தெரியும். இந்த நூல் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறும் போது இந்த நூலின் கருத்துக்களை நான் சிந்தித்த போது எனக்கு எழுதப்பட்ட புதிய கருத்துக்கள் புரிய வைக்கப்பட்டன என்றால் நல்லொழுக்கம் தொடர்பான விசயங்களில் அது மகத்தான சீர்திருத்தத்தை ஏற்படுத்தி விட்டது என்று கூறியுள்ளார்கள். எனவே அவர்களின் இந்த பணிகளைப் பார்த்து அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பு பற்றிய மகிமை இன்னும் நமக்கு ஒளிமயமாகி விட்டது. உண்மையில் இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாகும். இதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர்வான நிரந்தர அந்தஸ்தும் அதன் மகிமையும் வெளிப்பட்டு விட்டது.

இந்த முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பது ஒரு நபரின் பிறப்புடனோ அல்லது அவர் பணிகளை செய்து விட்டு சென்றதுடனோ மட்டும் தொடர்புடையதல்ல. இந்த பணிகளை இன்னும் சிறப்பாக செய்பவர் நம்மவர்களில் உருவாகும்போதுதான் இந்த முன்னறிவிப்பின் மகிமையும் மேலும் அதிகரிக்கும். எனவே இன்று நாமும் நமது வட்டத்திற்குள் முஸ்லிஹ் ஆக சீர்திருத்தவாதியாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தனது அறிவாலும், பேச்சாலும், செயலாலும் இஸ்லாத்தின் அழகான போதனைகளை எல்லா பக்கமும் பரப்ப வேண்டும். நஃப்ஸின் சீர்திருத்தம் பக்கமும் கவனம் செலுத்துங்கள். சந்ததிகளை சீர்திருத்துவது பற்றியும் கவனம் செலுத்துங்கள். சமுதாயத்தின் சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். இந்த சீர்திருத்தத்தை உலகில் ஏற்படுத்த முழுமையாக முயற்சி செய்யுங்கள். இவற்றின் நீரூற்றாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திகழ்கின்றார்கள். இந்த முயற்சிகளை நாம் செய்யாவிட்டால் வெறும் பொருளற்ற சொற்பொழிவாகத்தான் நமது சொற்பொழிவுகள் இருக்கும். அல்லாஹ் நமக்கு இதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக.

ஜுமுஆ தொழுகைக்கு பிறகு நான் ஒரு ஜனாஸா தொழுகை தொழவைப்பேன். மவ்லானா பஷீர் அஹ்மத் சாஹிப் ஆர்சார்டு அவர்களின் மனைவி கன்தா ஆர்சர்டு சாஹிபா வஃபாத் ஆகி விட்டார்கள். 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி தமது 81வது வயதில் இவர் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான டாக்டர் கலீஃபா ராஸித் சாஹிப் அவர்களின் பேத்தியாவார்கள். ஹஸ்ரத் மர்ஹூம் கலீஃபா அலிமுத்தீன் சாஹிபின் மகளாவார்கள். ஹஸ்ரத் உம்மே நாஸிர் (ரலி) அவர்களின் சகோதரரின் மகளாவார்கள். உம்மே நாஸிர் (ரலி)

அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் முதல் மனைவி ஆவார். தொழுகை மற்றும் நோன்பை கடைபிடிப்பவராகவும் பொறுமை மற்றும் நன்றியுணர்வு மிக்கவராகவும் இவர் இருந்தார். ஏழைகளை கவனிப்பவராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும் இருந்தார். கிலாஃபத் மீது அளவு கடந்த பற்று இருந்தது. தூய உள்ளம் கொண்டவராக இருந்தார். அல்லாஹ்வுடன் தொடர்பும் அவர்மீது முழுமையான நம்பிக்கை வைப்பதும் அவரது சிறந்த பண்பாக இருந்தது.

தனது வாழ்வை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்த தமது கணவருடன் சேர்ந்து ஒத்துழைப்பு கொடுத்து வந்தார். ஸ்டகாட்லாந்து லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவியாக 10 ஆண்டுகள் இருந்து வந்தார்கள். லஜ்னா, நாஸிராத் தர்பிய்யத்திற்காக எப்போதும் முயற்சி செய்து வந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்தவராவார். இவருக்கு இரண்டு மகள்களும் மூன்று மகன்களும் உள்ளனர். இவரது பிள்ளைகள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் மிகவும் முன்னேறிச் செல்பவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தியாவில் ராணுவத்தில் பணி புரிந்த காலத்தில் பஷீர் ஆர்ச்சார்டு சாஹிப் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1945 ஆம் ஆண்டு காதியானில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்தித்தார்கள். ஜமாஅத்தில் இணைந்தார்கள். 1946 ல் தனது வாழ்வை அர்ப்பணித்தவாறு முதலாவது ஆங்கிலேய முபல்லிக்காக பணியாற்றும் நற்பேற்றை பெற்றார். இவர்களது மனைவியையும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே தேர்வு செய்தார்கள். மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஸ்காட்லாந்தில் முபல்லிக்காக பணியாற்றியுள்ளார். அவர் அஹ்மதியான போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஆங்கிலேயர்களின் கவனம் இஸ்லாத்தின் பக்கம் திரும்பாது என்று நான் ஆரம்பத்தில் நினைத்திருந்தேன். ஆனால் இவர் அஹ்மதியாகி விட்டதை பார்த்த பிறகு இனி ஆங்கிலேயர்களும் இஸ்லாத்தின் பக்கம் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகின்றேன் என்று கூறினார்கள்.

தனது கணவருடன் எல்லா இடங்களிலும் மிகுந்த பற்றுடன் இவர் ஜமாஅத்திற்கு தொண்டு செய்து வந்துள்ளார்.

.................

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 18.02.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**